பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
02 07 2026 THURSDAY 6 45 AM

## வணக்கம் - மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ஜப்பான் இடையேயான ஆண்டு உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

2. வீட்டுவசதி வாரியத்தின் அனைத்து சேவைகளையும் இணையதளம் மூலமாக வழங்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் ஆளும் கட்சி மீதான பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் அரசின் தவறுகளை மறைக்கவே திமுக மீது பழிசுமத்தப்படுவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தின் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி பாதியிலேயே கைவிடப்பட்டது.

>>>>>><<<<<<

இந்தியா - ஜப்பான் இடையேயான ஆண்டு உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

இந்த உச்சி மாநாட்டின் போது பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் Sanae Takaichi-யுடன் பேச்சு நடத்துகிறார்.

இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து வலுப்படுத்தும் வகையில் இந்த உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

*அத்துடன் பரஸ்பரம் நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் இருதரப்பிலும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படவுள்ளது.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஜப்பான் பிரதமர் Sanae Takaichi-க்கும் இடையேயான பேச்சுக்களை தொடர்ந்து, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*முன்னதாக, இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மூன்றுநாள் பயணமாக ஜப்பான் பிரதமர் நேற்று மாலை புதுதில்லி வந்தடைந்தார்.*

*இதற்கிடையே, ஜப்பான் பிரதமருடன், பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்க தாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த சந்திப்பு, இந்தியா - ஜப்பான் மற்றும் உலகளாவிய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.*

*தங்களுடைய கூட்டு முயற்சிகள் மூலம், இந்தியாவும் - ஜப்பானும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்திலும், அதற்கு அப்பாற்பட்டும் அமைதி ஸ்திரத்தன்மை மற்றும் செழுமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்று அவர் தெரிவித்துள்ளார்.*

*ஜப்பான் பிரதமர் Sanae Takaichi முதன்முறையாக இந்தியாவில் பயணம் செய்வது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*வீட்டுவசதி வாரியத்தின் அனைத்து சேவைகளையும் இணையதளம் மூலமாக வழங்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக, சென்னையில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*புதிய மனை மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வணிக வளாக கட்டுமானப்பணிகளை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்றும் திரு. ராஜ்குமார் வலியுறுத்தினார்.*

>>>>>><<<<<

*பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு எழுத விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களுக்கும் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு இன்று முதல் வழங்கப்படுகிறது.*

*இதுகுறித்து அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டை <u>www.dge.tn.gov.in</u> என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<

*ஆசிய ஜிம்னாஸ்டிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சேலத்தைச் சேர்ந்த வீரர் ஹர்ஷித்-துக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற அவர் இந்த சாதனையை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 49 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<

தமிழகத்தில் ஆளும் கட்சி மீதான பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் அரசின் தவறுகள் ஆகியவற்றை மறைக்கவே திமுக மீது பழிசுமத்தப்படுவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் சட்டத்துறை செயலாளர் திரு. என்.ஆர். இளங்கோ, த.வெ.க அரசின் மீதான அதிருப்தி, அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை மறைத்து திசை திருப்பவே த.வெ.க. சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவருக்கு திமுகவினர் பணம் கொடுக்க முன்வந்ததாக குற்றம் சாட்டப்பட்டு, 3 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளதாக கூறினார்.

இந்த வழக்கு அரசியல் காரணங்களுக்காக தொடரப்பட்ட வழக்கு என்றும், இது தவறான குற்றச்சாட்டு என்பதை திமுக நிரூபிக்கும் என்று திரு.என்.ஆர். இளங்கோ தெரிவித்தார்.

>>>>>><<<<<

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சில இடங்களில் மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 முதல் 29 டிகிரி செல்சியஸ்வரை இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்யாவின் மிகப் பெரிய Ufa எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது யுக்ரைன் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

>>>>>><<<<<

வெனிசுலா நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 295-ஆக அதிகரித்துள்ளது.

>>>>>><<<<<

இந்தியா - மலேசியா இடையே இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பு குறித்து புதுதில்லியில் விவாதிக்கப்பட்டது.

>>>>>><<<<<

ஜார்க்கண்ட் மாநிலத்தில், கிழக்கு சிங்பும் மாவட்டத்தில் 4 பேர் மலேரியா பாதிப்பால் உயிரிழந்ததை அடுத்து, மாநிலம் முழுவதும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

>>>>>><<<<<

இணையம் வாயிலாக 25 லட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி செய்ததாக, ராஜ்கோட்டைச் சேர்ந்த ஒருவரை சிபிஐ கைது செய்துள்ளது.

>>>>>><<<<<

நாட்டின் பல்வேறு இடங்களில் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் நடத்திய சோதனையில் 9 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>>><<<<<

நாமக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, தென்காசி மாவட்டங்களில் இயங்கி வரும் சாயம், தோல், சலவை உள்ளிட்ட தொழிற்சாலைகளில் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் இளங்கலை முதலாமாண்டு மாணவியர்களுக்கான ஒருவார அறிமுகப் பயிற்சி திட்டம் நேற்று தொடங்கியது.

>>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி தினத்தை ஒட்டி, அதுதொடர்பான சிறப்புக் கருத்தரங்கம் கோவையில் நடைபெற்றது.

>>>>>><<<<<

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் லஞ்சம் பெற்ற காவல்துறையினர் 2 பேரை, லஞ்சஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<

மாவட்ட மாதாந்திர கல்விசார் ஆய்வுக்கூட்டம், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. எஸ். மாலதி ஹெலன் தலைமையில் நடைபெற்றது.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி மழை காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது.

Chester Le Street-ல் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 189 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஸ்ரேயஸ் ஐயர் 68 ரன் எடுத்தார்.

பின்னர் இங்கிலாந்து அணி ஆட்டத்தை தொடங்குவதற்கு முன்பு மழை தொடர்ந்து பெய்ததன் காரணமாக, போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளைமறுநாள் மான்செஸ்டரில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

Taunton-ல் நடைபெற்ற இந்தியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து-ஏ அணி 125 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

>>>>><<<<<

Canada ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Aakarshi Kashyap காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 21-14, 21-12 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Anna Tatranova-வை வென்றார்.

*>>>>>><<<<<*

*உலக கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.*

*அஹமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<*

*ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் - ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட்கணக்கில் ருமேனியா இணையை வென்றது.*

*மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Prajwal Dev - Nitin Kumar Sinha இணையும் வெற்றிபெற்று, காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<*

*உலக கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்து அணியும், பெல்ஜியம் அணியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.*

*நாக்அவுட் சுற்றில், இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல்கணக்கில் காங்கோ-வையும், பெல்ஜியம் 3-2 என்ற கோல்கணக்கில் செனகலையும் வென்றன.*

*>>>>>>END<<<<<<*